**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,**
**சாட்சியின் சான்றுரை - PW-1**

**O.S.No.9/2022**

| | | |
|---|---|---|
| பெயர் | - முருகன் | வட்டம் |
| த/பெ | - சுப்புராயலு | சாதி |
| வயது | - | மதம் |
| கிராமம் | - | தொழில் |

02.01.2024 அன்று 1969 ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 1 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். அவர் தரப்பில் நிருபண பிரமாணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்படுகிறது. கீழ் கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது.

1. 20.06.2019ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் மகனும் 2 முதல் 4 பிரதிவாதிகளின் தந்தையார் ஜெயராமன் எனக்கு எழுதி கொடுத்த பிராமிசரி நோட்டு வா.சா.ஆ1.

2. என் சார்பாக எனது வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு 16.12.2021ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ2.

3. வாசா2 ஐ பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ4 வரிசை.

4. 27.12.2021ம் தேதி பிரதிவாதிகள் வாசா2 அறிவிப்பிற்ககாக அவரது வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதிவு அறிவிப்பு வா.சா.ஆ4.

5.14.03.2012ம் தேதி திரு.ஜெயராமன் என்பவருக்கு திருமதி.மங்கையம்மாள் எழுதி கொடுத்த கிரையபத்திரத்தின் கணிணி மூலம் எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் வாசாஆ5.

6. 25.10.2013ம் தேதி திரு.ஜெயராமன் என்பவருக்க் திரு.மதுரை எழுதி கொடுத்த கிரையபத்திரத்தின் கணிணி மூலம் எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் வாசாஆ6.

7. 14.03.2012ம் தேதி திரு.ஜெயராமன் என்பவருக்க் திருமதி.மங்கையம்மாள் எழுதி கொடுத்த கிரையபத்திரத்தின் கணிணி மூலம் எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் வாசாஆ7.

8. 29.03.2012ம் தேதி திரு.ஜெயராமனுக்கு கஸ்தூரி வகையரா எழுதி கொடுத்த கிரையபத்திரத்தின் கணிணி மூலம் எடுக்கப்பட்ட சான்றிட்ட நகல் வாசாஆ8.

9. 20.01.2022ம் தேதி சார்பதிவாளர் திருநாவலூர் அவர்களால் 01.01.1975 முதல் 19.01.2022ம் தேதி வரை உட்பட்ட காலத்திற்கு சொத்து தொடர்பாக கணிணி மூலம் வழங்கப்பட்ட வில்லங்க சான்றிதழின்சான்றிட்ட நகல் வாசாஆ9.

10. 20.01.2022ல் சொத்திற்காக எடுக்கப்பட்ட வழிகாட்டி மதிப்பு வாசாஆ10.

11. இந்திய அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட ஆதார் அட்டை எண். 6414 ம.சா.ஆ 11.

பிரதிவாதி தரப்பில் முதலாம் ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு ஆட்சபனை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு தொழில் விவசாயம் ஆகும். எனக்கு சொந்தமாக 13 ஏக்கர் நிலம் உள்ளது. 10 ஏக்கர் நிலம் குத்தகைக்கு எடுத்து பயிர் செய்கிறேன். நான் பயிர் செய்யும் அனைத்து பயிர்களும் அரசாங்க விதை பண்ணைக்கு விதையாக விற்பனை செய்வேன். மேலும் என் வீட்டிலும் விதைகளை வைத்து வியாபாரம் செய்வதிலும் நல்ல லாபம் கிடைக்கிறது. நான் யார் நிலத்தை குத்தகைக்கு எடுத்து பயிர் செய்கிறேன் என்றால் பிரபாகரன் என்பவரிடம் 2 ஏக்கர், சுந்தர மூர்த்தி என்பவரிடம் 2 ஏக்கர், மாரி வகையராவிடம் 2 ஏக்கர், என் சித்தப்பா தட்சணாமூர்த்தியிடம் 2 ஏக்கர், பாபு செங்குறிச்சி என்பவரிடமும் 2 ஏக்கர் நிலம் குத்தகைக்கு வாங்கி பயிர்செய்கிறேன். குத்தகை சம்மந்தமாக பதிவு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 13 ஏக்கர் நிலத்திற்கு பட்டா எண்.571, 632, 459 இன்னும் 2 நிலங்கள் உள்ளது. அதன் பட்டா எண் கவனத்தில் இல்லை. இந்த நிலங்கள் ஆனைவாரி, ஆத்திபட்டு எல்லைக்குட்பட்ட இடத்தில் உள்ளது. ஆனைவாரி மற்றும் டி.எடையார் கிராமத்திற்கும் எவ்வளவு தொலைவு உள்ளது என்றால் சுமார் 10 கிமீ தொலைவு உள்ளது. என் ஊருக்கும் ஆமூர் கிராமத்திற்கும் 9 கிமீ தொலைவு உள்ளது. வாக்குமூலத்தில் பாண்டு எந்த ஊரில்

எழுதப்பட்டுள்ளது என்ற விவரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை விவரங்களை நான் படித்து பார்த்தேன். பிரதிவாதி தனது ஆட்சேபனையில் 2வது சாட்சி மற்றும் எழுதியவர் யார் என்றும் தெரிவிக்கும் பட்சத்தில் வாதிக்கு என்ன உறவு என்பதும் எந்தவகையில் பிரதிவாதிக்கு விரோதம் என்பது குறித்து தெரிவித்துக்கொள்ளவதற்கு இயலும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அவர்களை பற்றிய விவரத்தை நீதிமன்றத்தில் சொன்னேனா என்றால் நீதிமன்றத்தில் என்னிடம் கேட்கவில்லை. ஆனால் இன்னும் நான் அவர்களை விசாரிக்கிறேன். செந்தில் வா.தசா.2 எனக்கு என்ன உறவு என்றால் அவர் எனக்கு பழக்கம். சீனுவாசன் எனக்கு உறவா என்றால் என்னுடைய தங்கை கணவர். நான் எது செய்தாலும் அவரை வைத்து தான் செய்வேன். வா.சா2ஐ யார் அழைத்து வந்தார் என்றால் சீனுவாசன் அழைத்து வந்தார். வா.சா2ஐ நான் அழைக்கவில்லை. ஆனால் அவர் சீனுவாசனுடன் என் வீட்டிற்கு வந்தார். சீனுவாசனுக்கு அவர் தெரிந்தவர். புரோநோட்டில் உள்ள கையெழுத்து ஜெயராமனுடையது இல்லை என்றால் சரியல்ல. என் வீட்டில் வைத்து தான் பணத்தை வாங்கிகொண்டு கையெழுத்து போட்டார். 1வது கையெழுத்து 2ம் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் சா ியல்ல. ஜெயராமனுடன் 2ம் பிரதிவாதியும் என் வீட்டிற்கு வந்து ஜெயராமன் பணம் வாங்கியவுடன் சாட்சியாக 2ம் பிரதிவாதி கையெழுத்து போட்டார். காலஞ்சென்ற ஜெயராமன் எந்த காலத்திலும் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் அவர் பிராமிசரி நோட்டை எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஜெயராமன் தன்னுடைய பெண்ணுக்கு திருமணத்திற்கான கடனும் வீடு கட்டியதற்கான கடனும் அதிகமாகிவிட்டது என்றும் அதற்காக பணம் வேண்டும் என்று கேட்டு ஒரு வாரமாக என்னிடம் நச்சரித்து வந்தார்.. பின்பு நான் பணத்தை சரிசெய்தவிட்டு அவரிடம் தெரிவித்ததன் பேரில் அவர் 2ம் பிரதிவாதியுடன் என் வீட்டிற்கு வந்து

என்னிடம் பணத்தை சீனுவாசன் முன்பு பெற்றுக்கொண்டார். சீனுவாசன் பாண்டை எழுதினார். அதில் ஜெயராமன் கையெழுத்து இட்டார். அதற்கு பின்பு எங்கள் முன்னிலையில் 2ம் பிரதிவாதி 1ம் சாட்சி கையெழுத்து இட்டார். இன்னொறு சாட்சியை கேட்டபோது உங்களுடன் தான் ஒரு சாட்சி இருக்கிறாரா அவரை போட சொல்லுங்கள் என்று சொன்னதன் பேரில் செந்தில் அங்கு இருந்தார். அவரும் கையெழுத்து போட்டார். 2ம் பிரதிவாதி 2017ல் மே மாதம் என்னிடம் ரூ.2 லட்சம் கடன் வாங்கினாரா என்றால் மே மாதம் வாங்கவில்லை. 2019ல் செப்டம்பர் மாதம் 11ம் தேதி ரூ.2 லட்சம் 2ம் பிரதிவாதி கடன் வாங்கினார். 16.10.2010ல் ரூ.2 லட்சம் கடன் வாங்கியுள்ளார். 11.09.2019ல் ரூ.1 லட்சம் 2ம் பிரதிவாதி கடன் வாங்கினாா என்றால் பிரதிவாதி 2 லட்சம் 2 தவணையில் வாங்கினார். ஆனால் 11.09.2019 தேதி என்று தாங்கள் சொல்லும் தேதி தவறு. 2ம் பிடிரதிவாதி ஆட்சேபனையில் சொல்லியுள்ள கடனுக்கு 36 சதவீதம் வட்டியா என்றால் இல்லை. 12 சதவீதம் வட்டியாகும். சிலம்பரசன் கடன் வாங்கிய விவரத்தை எனது தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சிலம்பரசனிடம் கடன் கொடுக்கும் போது ஒரு பச்சை தாளில் பூர்த்தி செய்யாமல் வருவாய் வீல்லை ஒட்டி கையெழுத்து வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் புரோநோட்டில் ரூ.2க்கு வருவாய் வில்லை ஒட்டி 2ம் பிரதிவாதி கையெழுத்து செய்துள்ளார். அந்த பிராமிசரி நோட்டும் என்னிடம் உள்ளதா என்றால் வீட்டில் உள்ளது. அதை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக உள்ளேன். அது பணம் அவர் அளிக்கவில்லை என்பதால் காலாவதி ஆகிவிட்டது. அதை நான் காவல் நிலையத்தில் தரலாம் என்று உள்ளேன். நீதிமன்றம் கேட்டால் தர தயாராக உள்ளேன். 11.09.2019ல் 2ம் பிரதிவாதி பச்சை தாளில் 2 வருவாய் வில்லை ஒட்டி போட்டுக்கொடுத்த கையெழுத்தை பார்த்து தற்போது தாக்கல் செய்துள்ள வா.சாஆ1ல் நான் வேண்டியவர்களை வைத்து கையெழுத்து போட்டு நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் தவறு. அவ்வாறு நான் தாக்கல் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அந்த பணத்தை நான் எவ்வாறு எடுத்துக்கொடுத்தேன் என்றால் நான் பல்லவன் வங்கி, திருவெண்ணைநல்லூாிலிருந்தும், ஐசிஐசிஐ வங்கி, விழுப்புரத்திலிருந்தும், பாரத ஸ்டேட் வங்கியிலிருந்தும் மற்றும் விதை நெல்லை விற்று என்னிடமிருந்து பணத்தையும் சேர்த்து ஜெயராமனுக்கு கொடுத்தேன். வங்கியிலிருந்து எடுத்துகொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் இருக்கிறேன். ஜெயராமன் பணம் வாங்கவில்லை என்றும் புரோநோட்டில் உள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்றால் சரியல்ல. சிலம்பரசன் கையெழுத்தையும் ஜெயராமன் கையெழுத்தையும் பரிசோதனை செய்வதற்கு அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. பணம் கொடுத்த போது மணி என்ன இருக்கும் என்றால் சுமராக 10.00 மணி இருக்கும். பணம் எவ்வாறு கொடுத்தேன் என்றால் ரூ.500 தாளாக கொடுத்தேன். என் வீட்டிற்கு 2ம் பிரதிவாதியும் சுமார் 10.00 மணிக்கு வந்தார். சாட்சியும் பாண்டு எழுதுபவரும் அவர்கள் வந்த 5 நிமிடத்தில் வந்துவிட்டார்கள். பிராமிசரி நோட்டும் ரெவன்யூ வில்லையும் சிலம்பரசன் (2ம் பிரதிவாதி) வாங்கிவந்து என்னிடம் கொடுத்தார். நான் ஜெயராமனுக்கு பணமே கொடுக்கவில்லை என்றும் அதிலுள்ள கையெழுத்து அவரது அல்ல என்றும் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,</u>
<u>சாட்சியின் சான்றுரை - PW-2</u>

**O.S.No.9/2022**

| | | |
|---|---|---|
| பெயர் | - செந்தில் | வட்டம் |
| த/பெ | - ராமசாமி | சாதி |
| வயது | - | மதம் |
| கிராமம் | - | தொழில் |

02.01.2024 அன்று 1969 ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 2 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். அவர் தரப்பில் நிருபண பிரமாணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்படுகிறது. கீழ் கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது.

1. இந்திய அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட ஆதார் அட்டை எண். 6138 ம.சா.ஆ 12.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

வாதி முருகன் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் நண்பருக்கு மைத்துனர். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொன்னார் என்றால் வாதி சொன்னார். எனக்கு சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்தில் சம்மன் சார்வு செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கில் பிரதிவாதிகளை யாரை தெரியும் என்றால் 2ம் பிரதிவாதி மற்றும் ஜெயராமனை தெரியும். பிராமிசரி நோட்டில் கையெழுத்து செய்யவேண்டும் எனக்கு வாசாஆ1 சொன்னாரா என்றால் இல்லை. எனது நண்பர் சீனுவாசன் போன் மூலம் கையெழுத்து செய்யும் படி சொன்னார். நான் எத்தனை மணிக்கு வாதியின் வீட்டிற்கு வந்தேன் என்றால் சுமார் 10.00 மணி இருக்கும். நான் அவர் வீட்டிற்கு சீனுவாசனுடன் சென்றேன். பிராமிசரி நோட்டு பாரம், ரெவின்யூ வில்லையும் வாதி வைத்திருந்தாரா என்றால் அவர் வீட்டில் இருந்தது. ஜெயராமனுக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார்

60 வயது இருக்கும். ஜெயராமனுக்கு வசதி உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. கையெழுத்து எந்த மொழியில் போட்டார் என்றால் தமிழில் போட்டார். சாட்சி சிலம்பரசன் தனது கையெழுத்தை ஆங்கிலத்தில் போட்டார். வாதி பணத்தை எவ்வாறு எடுத்துவந்தார் என்றால் தெரியாது. ஆனால் எடுத்துவந்தார். அவர் எவ்வாறு பணத்தை எடுத்துவந்தார் என்றால் ரூ.500 தாளாக எடுத்துவந்தார். ஜெயராமன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் ஆனைவாரி கிராமத்தை சேர்ந்தவர். எனது ஊருக்கும் ஆனைவாரிக்கும் எவ்வளவு தொலைவு என்றால் 10 கிமீ தொலைவு ஆகும். பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து ஜெயராமனின் கையெழுத்து இல்லை என்றும் அவர் கையெழுத்தை பிராமிசரி நோட்டில் போடவில்லை என்றால் சரியல்ல. பிராமிசரி நோட்டில் ஜெயராமன் கையெழுத்து போட்டார். வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. நான் வாதிக்கு வேண்டபட்டவர் என்பதால் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்,
## சாட்சியின் சான்றுரை - PW-3

## O.S.No.9/2022

| | | |
|---|---|---|
| பெயர் | - சீனுவாசன் | வட்டம் |
| த/பெ | - ராமதாஸ் | சாதி |
| வயது | - | மதம் |
| கிராமம் | - | தொழில் |

02.01.2024 அன்று 1969 ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி என்னால் உறுதிமொழி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது.

வாதி சாட்சி 2 வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். அவர் தரப்பில் நிருபண பிரமாணம் வாக்குமூலம் தாக்கல் செய்யப்படுகிறது. கீழ் கண்ட ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது.

1. இந்திய அரசாங்கத்தால் எனக்கு வழங்கப்பட்ட ஆதார் அட்டை எண். 8531 ம.சா.ஆ 13.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு முருகன் என்ன உறவு என்றால் என் மைத்துனர். நான் வாதி முருகன் சம்மந்தப்பட்ட வேறு ஆவணத்தில் போட்டுள்ளேனா என்றால் வேறு பிராமிசரி நோட்டில் போட்டுள்ளேன். வேறு எதிலும் போடவில்லை. வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொன்னார் என்றால் எனக்கு தெரியும். படித்துபார்த்துவிட்டு கையெழுத்து போட்டேன். அதை நான் சொல்லவில்லை. பிராமிசரி நோட்டு எங்கு எழுதப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் முருகன் வீட்டில் எழுதப்பட்டது. பிராமிசரி நோட்டு பாண்டு தாளில் எழுதப்பட்டது. பிராமிசரி நோட்டை யார் வாங்கிவரசொன்னது என்றால் வேறு ஒரு ஆளைவிட்டு முருகன் தான் வாங்கிவரசொன்னார். ரெவன்யூ வில்லை மட்டும் வீட்டில் இருந்தது. ஜெயராமனை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ஜெயராமனும் நானும் ஒரே கட்சியை சேர்ந்தவர்கள். அரசியல் ரீதியாக எனக்கு அவரை

பிடிக்காது என்றால் இல்லை. ஜெயராமனுக்கு சொத்துக்கள் உள்ளதா என்றால் அதை பற்றிய விவரங்கள் எனக்கு சரியாக தெரியாது. பிராமிசரி நோட்டு சம்மந்தமாக என்னை யார் வரசொன்னார்கள் என்றால் வாதி தான் வரசொன்னார். நான் மட்டும் அங்கு சென்றேனா என்றால் நானும் சாட்சி செந்திலும் சென்றோம். முருகன் பணத்தை எவ்வாறு கொடுத்தார் என்றால் வீட்டிலிருந்து எடுத்து கொடுத்தார். பாண்டு எழுதும் போது வேறு யார் இருந்தார் என்றால் ஜெயராமன் மற்றும் 2ம் பிரதிவாதி இருந்தார்கள். எத்தனை ரெவன்யூ வில்லைகள் ஒட்டப்பட்டது என்றால் 3 ஒட்டப்பட்டது. யார் கையெழுத்து போட்டார் என்றால் ஜெயராமன் போட்டார். நானும் முருகனும் செந்திலும் பிராமிசரி நோட்டை ஜோடித்து போட்டோம் என்றால் சரியல்ல. ஜெயராமன் எத்தனை கையெழுத்து போட்டார் என்றால் 2 கையெழுத்து போட்டார். பிராமிசரி நோட்டு வாசகத்தை யார் சொன்னார் என்றால் நானே எழுதி கொண்டார். முருகன் பணத்தை வங்கியிலிருந்து எடுத்துவந்தாரா என்றால் அது எனக்கு தெரியாது. அவர் என்னிடம் சொல்லவில்லையா என்றால் நான் கேட்கவில்லை. நான் சொல்வது போல் ஜெயராமன் என் முன்னிலையில் கையெழுத்து போட்டார் என்பது அப்பட்டமான பொய் என்றும் அந்த புரோநோட்டில் உள்ள கையெழுத்து அவருடையதே இல்லை என்றால் சரியல்ல. வாதியின் நெருங்கிய உறவினர் என்றால் சரியல்ல.

Sd/- R.Poornima,
Principal Sessions Judge,
Villupuram.